புதுமலர்: 08 இதழ்: 01

# அனல்

தை - மாசி

2011

அவர்களைப் பார்த்து பயப்படவேண்டாம் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கின்றார். அவர் வல்லமையும் பயங்கரமுமான தேவன்

உபாகமம் 7:21

இணை ஆசிரியர்கள்
யோ.நிக்ஷன், வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.01.2011

# பொருளடக்கம்


* அனலின் குரல்
* கரையும் காலம் - கவிதை
* கதையும் கற்றதும் - பிரதிபலிப்பு
* வினா விடை - 43
* முடிவோ நித்திய ஜீவன்
* வாலிபர் வளாகம் - தோழமை
* பெண்கள் அரங்கு
* குறுக்கெழுத்துப்போட்டி - 41
* நற்செய்தி - மேலும் கடைசி நாட்களில்
* பக்தர்களின் பயிலகம்
* அருட்பணியாளர் சரிதை
* மூவரி முத்துக்கள்
* புதுவருடத்திற்கான அனலின் ஆன்மீக விருந்து


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

*ஆசிரியர் "அனல்",*
*347 நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம். இலங்கை.*

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


***திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11***

# அனலின் குரல்

**கிறிஸ்துவுக்குள் பிரியமான "அனல்" வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!.**

மறுபடியும் இப் புதிய ஆண்டில் இவ் முதல் சஞ்சிகை ஊடாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி!.

**எபிரேயர் 8:5 மலையிலே உனக்கு காண்பிக்கப் பட்ட மாதிரியின்படியே நீ எவ்லாவற்றையும் செய்ய "எச்சரிக்கையாயிரு".**

திருச்சபையைக் கட்டுவதற்கு தேவன் நாம் பின்பற்றக் கூடியதான திட்டமான பிரமாணத்தைக் கொடுத்துள்ளார். எனவே எங்கள் வாழ்க்கையையும், எங்கள் செயல்களையும், எங்கள் ஊழியங்களையும் குறித்ததான தேவனுடைய சித்தத்தை நாம் எம் வாழ்வில் நிறைவேற்ற வேண்டும். வேதம் சொல்லுகின்றது; நாம் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் என்பவைகளினால் கட்டுகின்றோம். ஆனாலும் நாம் தேவனுடைய அக்கினி பரிசோதனைக்கு தாக்குப்பிடிக்க கூடியதாய் கட்ட வேண்டும். அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும் நாளானது அதை விளங்கப்பண்ணும்.

கிறிஸ்தவ உபதேசத்தையும், கிறிஸ்தவ வாழ்க்கையையும் பொறுத்தமட்டில் வேதமே சட்டமாக இருக்கின்றது. நாம் பின்பற்றக் கூடியதான ஒரு பிரமாணமாகவும் இருக்கின்றது. அந்த தெய்வீக சத்திய வெளிப்பாட்டில் நாம் அந்தப் பிரமாணத்தைப் பின்பற்ற வேண்டும். அந்த வேதத்தை நாம் பின்பற்றுவது பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கல்லினால் கட்டுவதற்கு ஒப்பானது. இது தான் அக்கினிச் சோதனையில் நிலைநிற்கும். இப்போது புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நமக்கு நிழல்களோடும், அடையாளங்களோடும் சம்பந்தம் இல்லை. ஆனால் உண்மையோடு சம்பந்தம் உண்டு. எனவே தேவனுடைய வழிகாட்டுதலை பின்பற்றுவது எமக்கு அவசியமாகும்.

எனவே முக்கியமாய் எமது வாழ்க்கையை தேவனுடைய இறுதி சோதனைக்கு ஏற்ற வண்ணமாய் நாங்கள்

மாற்றி அமைக்க வேண்டும். ஏனெனில் எம்முடைய கிறிஸ்தவ வாழ்வு வீணாய் முடியாதபடிக்கு எமது கிறிஸ்தவத்தை உறுதிப்படுத்த இப் புதிய ஆண்டில் முயற்சி எடுப்போம். தேவன் மலையிலே காண்பித்த வண்ணம் ஆசரிப்பு கூடாரத்தை மோசே கட்டிய போது அதன் முடிவில் தேவ மகிமை அதை நிரப்பினது. அதே போல தேவன் காட்டிய வண்ணம் இந்தப் புதிய ஆண்டில் எம்முடைய வாழ்வை நாம் கட்டுவோமாக இருந்தால் நாங்கள் தேவன் வாசம்பண்ணும் ஆலயங்களாய் வாழமுடியும். தேவ பிரசன்னத்தை சுமந்தவர்களாய் அனேகருக்கு சாட்சிகளாய் இயேசுவின் நாமத்தை உயர்த்தி காண்பிக்க முடியும்.

எனவே இப் புதிய வருடத்தில் தேவனுடைய வார்த்தையின்படி வாழுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

– ஆசிரியர் –




நீதியின் சூரியன் இவ் ஆண்டில் உங்கள் மீது பிரகாசித்து அவர் மூலம் உங்கள் வாழ்வு செழிக்கவும், நோயற்ற, பெலவீனமற்ற, குறைவற்ற, இல்லாமையற்ற நிலை தோன்றி திருப்தியும் நிறைவும் பெற்று: இயேசுவின் வார்த்தைக்கு சாட்சியாய் இயேசுவை எங்கும் காண்பித்து அவர் கொடுக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும், சரீரத்திற்குரிய ஆசீர்வாதங்களும் பெற்று இன்னல்கள் அகன்று இன்பங்கள் பெற்று வாழ அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்!.

– ஆசிரியர் –

# கரையும் காலம்

காலங்கள் கைபிடி மாவாய்
காற்றில் தூசாக மாயமாய்
கரைந்து காணாமல் போவதாய்
காலம் சொல்லாமல் கரைகிறது



கண்ணீர்களும் கவலைகளும்
கணக்கின்றி காவியம் படைக்கும்
கால தேவன் சீக்கிரமாய்
கல்வாரியின் செய்தி கொண்டு வேகம் வருகிறார்

நடந்து போன வருடங்கள்
நலிந்து மெலிந்த யுகங்கள்
நம்மை அண்டி வந்த இவ்வாண்டு
நன்மைகளால் நிறைந்து நறுமணம் பரப்பட்டும்


சிலுவை அன்பைச் சொல்லி
சிந்திக்க வைத்து சிறைப்படுத்தும் ஆண்டு
சிந்தித்தால் பாவத்தை வெறுக்கும்
சீறாளர்களை சீஷர்களாக்குவோம் வாரீர்!.....





# பிரதிபலிப்பு

அநேக வருடங்களுக்கு முன்பாக ஒரு சிறிய கிராமத்திலே கண்ணாடி மாளிகை என அழைக்கப்பட்ட ஒரு பெரிய வீடு இருந்தது. அந்தக் கிராமத்தில் ஏதோ ஒரு மூலையிலே அழகிய மரங்களும் செடிகளும் நிறைந்து காணப்பட்ட ஒரு சோலையின் மத்தியிலே இந்த அசாதாரணமான வீடு அமைந்திருந்தது. அந்த வீட்டிலே காணப்பட்ட ஆயிரக்கணக்கான கண்ணாடிகளே அந்தப் பெயர் உருவானதற்கு காரணமாய் அமைந்தன.

ஒரு நாள் ஓர் அழகான நாய்க்குட்டி அந்த அதிசய மாளிகையைக் குறித்துக் கேள்விப்பட்டது. அந்த மாளிகையை எப்படியாவது ஒருமுறை சென்று பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் அந்த இடத்தைத் தேடி ஓடிச் சென்றது. அந்த நாய்க்குட்டி அந்த மாளிகையை அடைந்ததும் சந்தோஷமாக உள்ளே ஓடிச்சென் றது. மகிழ்ச்சியுடன் தனது வாலை ஆட்டி ஆட்டி அங்கும் இங்குமாக அவ்விடத்தை சுற்றி சுற்றி பார்த்தது. ஆஹா... என்ன ஆச்சரியம்.





தன்னைப் போலவே ஆயிரக்கணக்கான நாய்க் குட்டிகள் தன்னைப் பார்த்து மகிழ்ச்சியுடன் வாலை ஆட்டித் துள்ளிக் குதிப்பதைக் கண்டது. அந்த நாய்க் குட்டிக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. “ இது ஒரு அற்புதமான இடம். எவ்வளவு சந்தோஷமாக உள்ளது. நான் ஒவ்வொரு நாளும் இங்கே வரவேண்டும்” என்று கூறிக்கொண்டு வெளியே வந்தது.

சிறிது தூரத்தில் பாதையருகிலே சோகத்துடன் இன்னொரு நாய்க்குட்டி உட்கார்ந்திருந் தது. சந்தோஷமாகத் துள்ளிக் குதித்த வண்ணம் சென்றுகொண்டிருந்த நாய்க்குட்டியை அவதானித்தது. அந்த நாய்க்குட்டியின்

சந்தோஷத்திற்கான காரணத்தை அறிய ஆவல்கொண்டது. எனவே அந்த மாளிகையை ஒருமுறை சென்று பார்க்க முடிவெடுத்தது. மெதுவாக நடந்து சென்று சோகமான முகத்துடன் உள்ளே எட்டிப் பார்த்தது. ம்ம்.....ம்ம்.... தன்னைப் போலவே சோகமான முகத்துடன் ஆயிரக்கணக்கான நாய்க்குட்டிகள் நிற்பதைக் கண்டது. கோபம் வரவே அவைகளைப் பார்த்து உறுமியது. அந்தோ! ஆயிரக்கணக்கான நாய்க்குட்டிகள் அந்த நாய்க்குட்டியைப் பார்த்து உறுமின. அந்த நாய்க்குட்டிக்கு பொறுக்கமுடியவில்லை. " இது என்ன இடம். இங்கு இருக்கவே அருவருப்பாகவுள்ளது. நான் ஒருபோதும் மீண்டும் இங்கே வரப்போவதில்லை" என்று கூறிக்கொண்டு கோபத்தோடும் சோகத்தோடும் வெளியேறியது.

இதுபோலவே தான் இந்த உலகத்திலே நாம் சந்திக்கும் நபர்கள் ஒவ்வொருவரும் ஒரு கண்ணாடியைப் போல இருக்கிறார்கள். நாம் அவர்களுக்கு என்ன கொடுக்கின்றோமோ அதையே அவர்களிடமிருந்தும் பெறுவோம். அன்பைக் கொடுத்தால் அன்பைப் பெறுவோம். மகிழ்ச்சியைக் கொடுத்தால் மகிழ்ச்சியைப் பெறுவோம். நன்மைகளைக் கொடுத்தால் நன்மைகளைப் பெறுவோம். அதேபோல் ஏமாற்றத்தைக் கொடுத்தால் ஏமாற்றத்தைத் தான் பெறுவோம். எனவே மற்றவர்கள் எமக்குத் தருகின்ற பிரதிபலிப்பு எமது செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. சற்று சிந்தித்துப் பார்போம். நாம் அனுதினமும் சந்திக்கும் மனிதர்களிடமிருந்து என்ன பிரதிபலிப்பைக் காண்கிறோம்?

**எனவே இப்புத்தாண்டிலே எமது செயற்பாடுகளை மாற்றி அமைத்துக்கொள்வோம். சந்தோஷத்தையும், சமாதானத்தையும், அன்பையும், பரிவையும் மற்றவர்களுக்குக் கொடுப்போம். அப்போது அதன் பலன் ஆயிரக்கணக்கில் எமக்கு திரும்ப கிடைக்கும். வாழ்வின் அர்த்தம் சந்தோஷமாகும். அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். தேவனின் கிருபையும் சமாதானமும் உங்கள் வாழ்வின் பங்காக மாறக்கடவது.**

கெ. இன்பரூபன்

## வினாவிடை 43

01. நான் சிறுவயது முதல் கர்த்தருக்கு பயந்து நடக்கிறவன் என்றது யார்?
02. தன் ஆத்துமாவை சேதப்படுத்துகிறவன் இவன் யார்?
03. சுகம் பெற்ற பின் பாவமன்னிப்பு பெற்றவன் யார்?
04. கன்மலைகளில் குதித்து வரும் கலைமானைப் பற்றி வாசிப்பது எங்கே?
05. எனக்கு சுகமுமில்லை இளைப்பாறுதலுமில்லை என்றது யார்?
06. யாருடைய கண் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது?
07. யாருடைய நாவு பூமியெங்கும் உலாவுகிறது?
08. காணாமல் போனதை தேடிப்போனவன் அடைந்தது என்ன?



09. எது முகக்களையை உண்டுபண்ணும்?
10. எது முகமலர்ச்சியை உண்டுபண்ணும்?









இயேசு கிறிஸ்துவினால் ஒரு மனிதனுக்கு கொடுக்கப்படும் மிக உன்னதமான சிலாக்கியம் இதுவாகும். இதைப் பெற்றுக் கொண்டுள்ளீரா? அல்லது இன்றே பெற்றுக் கொள்ள வாஞ்சையோடே அவரை நாடுவீராக!.

❖ **இயேசுவின் நாமத்தின் மேல் விசுவாசம் வைக்க வேண்டும். – யோவான் 1:12**

மெய்யாகவே நான் மரிக்க வேண்டிய இடத்திலே கிறிஸ்து மரித்தார் என்றும், என்னுடைய பாவங்கள், அக்கிரமங்கள், தீய செயல்களை, வழிதப்பி நடந்த வேளைகள், எல்லாவற்றையும் அவர் ஏற்றுக் கொண்டார் என்றும், அவரே என் ஆண்டவரும் இரட்சகரும் என்றும் **நீ விசுவாசித்து இயேசுவை உன் வாழ்வில் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் எனக்கு பிள்ளை என்கின்ற அதிகாரத்தை [உரிமையை] தருவார்.** நீயும் சர்வ வல்லவருக்கு பிள்ளையாகலாம். அவர் உனக்கு தகப்பனாவர்.

**இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்? "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி – அப்போஸ்தலர் 16:30-31"**

**இயேசு கிறிஸ்து உனக்காக மரித்து, உனக்காக உயிர்த்து எழுந்தார் என்பதனை விசுவாசி. உன் விசுவாசத்தை வாயினால் அறிக்கையிடு. அவரை விசுவாசிக்கிறவன் வெட்கப்படுவதில்லை.**

❖ **இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கும்.**

**அவர் தரும் நித்திய ஜீவனை பெறமுடியாதபடி தடையாக நிற்கும் காரியம் பாவமாகும்.** ஒரு மனிதன் நித்திய

ராஜ்யத்தை, அவர் தரும் பாவமன்னிப்பின் மூலம் மட்டும் பெற்றுக் கொள்ள முடியும். வேறு வழி ஒன்றுமே இல்லை, வேறு வழி கிடையாது. **தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். நீதிமொழிகள் 28:13** பூமியில் வாழ்கின்ற போதே நீ தேவனுடைய பார்வையில் இரக்கத்தைப் பெற்று வாழ உன் பாவங்கள் தடையாக இருக்குமானால் அவற்றை இயேசுவிடம் அறிக்கை செய்து இனிமேலும் செய்யாமல் விட்டுவிடு.

### ❖ பரிசுத்தமாகுதல் உங்களுக்கு கிடைக்கும் பலன்

பரிசுத்தமாகுதல் உன் வாழ்வில் அனுதினமும் நடைபெற்று கொண்டே இருக்க வேண்டும். நாளுக்கு நாள் உன் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் தேவன் விரும்பும் பரிசுத்தம் பெருக வேண்டும். **பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும், ஒருத்தியும் கர்த்தரை தரிசிப்பதில்லை. உங்களை அழைத்த தேவன் பரிசுத்தராய் இருக்கிறார். பரிசுத்தமாய் இருங்கள்.** தேவன் விரும்புவதை நீயும் விரும்புவாயா?

### ❖ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.

**பாவத்தின் சம்பளம் மரணம்.** ஜீவகாலம் எல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள் உள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கு மரணத்துக்கு அதிகாரியான பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் இயேசு கிறிஸ்து வந்தார்.

**ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்கு கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன். ரோமர் 6:22.**

ரோமர்










**உன்னதரின் உயர்ந்த பரிசுத்த நாமத்தில் என் உள்ளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!**


***ப்ரியமானவர்களே: சிறந்த ஓர் வாலிப ஜீவியத்தை ஜீவிப்பதற்கும் மாறாக வாழ்க்கையையே சிதைத்துவிடும் அளவிற்கும் தாக்கத்தை உண்டுபண்ணவல்லது தோழமை/ சினேகிதத்துவம்.*** ஒவ்வொரு மனிதனதும் தன் ஜீவிய நாட்களில் தன் ஒத்த பாலரோடு அல்லது எதிர்பாலரோடு நட்பை வைத்துக் கொள்ளவும், ஒருவருக்கு ஒருவர் அன்பின் செய்திகளையும், வாழ்க்கையின் மேன்மை நிலைகளையும் கூடவே தங்கள் விருப்பு வெறுப்புக்களையும் எதிர்காலத்தையம் குறித்து ஆராய்வது இன்றையு காலகட்டத்தில் சர்வசாதராணமாகிவிட்டது.


உதாரணமாக: கணனி மூலமாக பல பல நூற்றுக் கணக்கான நண்பர்களை பிடித்துக் கொள்கின்றார்கள். நேரம், காலம் எல்லாவற்றையும் அதற்காகவே அதிக



செலவு இடுகிறார்கள். அந்த அளவிற்கு இன்று தோழமை வலுப்பெற்றுள்ளது.

ஒரே கிராமத்தில் வசிப்போர் மாத்திரம் தோழமை கொள்ளும் காலம் கடந்து சென்று இன்று இருந்த இடத்திலிருந்தே உலகத்தின் மூலை முடுக்கு எங்கும் நட்பைத் தேடவும், தொடரவும் விஞ்ஞானம் வழி சமைத்திருக் கின்றது. அது அறிவின் உச்சக்கட்டம்.



நல்ல தோழமையைக் கண்டுபிடிப்பதற்காக வாலிபர்கள் ஏக்கம் கொள்கின்றனர். சில சில நாட்கள் நண்பர்களாகவும், சிலர் அதிக நாட்களாக தோழர்களாகவும், சிலர் சில மணித்தியாலங்கள் மட்டுமே நண்பர்களாகவும் தங்கள் ஜீவியத்தில் கடந்து வந்திட வாய்ப்புண்டு.

**உன்னுடைய தோழமை யாரோடு இருக்கின்றது? அது எப்படிப்பட்ட நிலைமையை இந்த ஆண்டு உன் வாழ்வில் நடத்தப் போகின்றது நண்பா, நண்பி, கிறிஸ்துவை ஏற்ற அவரின் பிள்ளையான நீ உலக நண்பர்களோடு, சினேகமும் அவர்களின் வழி செல்வதும் முற்றும் தவறானதாகும்.**

***வாலிபத்தில் தேவன் விரும்பும் ஓர் நிலையை நீ அடைய வேண்டுமானால் உன் சினேகம், ஐக்கியம், தோழமை, நட்புறவு யாரோடு இருக்கின்றது.***

பரிசுத்த வேதாகமத்தில் மிகவும் சிறந்த ஓர் வாலிபன் குடும்பத்தில், நல்லவன், பெற்றோர் அவனுக்காகவும் அவர் எதிர்காலத்துக்காகவும் பட்டபிரயாசம் மிகையாகாது. அவ்விதமான சகல நன்மைகளையும் பெற்ற வாலிபன் ஏன் தேவனே அவனுடைய பிறப்பையும், பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும் என்று பெற்றோருக்கு முன்னதாகவே சொல்லியிருந்தார். கூடவே இவன் எதற்காக ஏற்படுத்தப்பட்டவன். இவன் மூலம் நடக்கும் காரியங்கள் என்ன என்ன இப்படி பல காரியம், அனேகரை விடுதலையாக்குவான் எதிரிகளின் கையிலிருந்து இவன் பெரும் வெற்றியை பெற்றுத் தருவான். இவன் மூலம் அனேகருக்கு நன்மையும் இளைப்பாறுதலும் உண்டாயிருக்கும் என்று பெற்றோருக்கு இவன் பிறப்பிற்கு முன்னே சொல்லப்பட்டு, பத்திரமாய் வளர்க்கப்பட்டு வந்த வாலிபன்.



இப்போது வயது வந்து பிரயாணங்களை தனியே செய்யும் அளவிற்கு இவனுக்கு ஞானமும் சரீர வளர்த்தியும், பணமும், போக்கு வரத்து காரியங்களும் தெரிந்தவுடன் தன் இஷ்டத்திற்கு நினைத்த நினைத்தநேரமெல்லாம்நினைத்த நினைத்த இடத்திற்கு போய்


தனக்கு பிடித்த காரியங்களைச் செயற்படுத்த ஆரம்பித்து விட் டான். சிலவற்றில் இன்பமும், வெற்றியும் கண்டான். சில பல பாவச் செயல்களில் ஈடுபட்டான். நாட்கள் அப்படியும், இப்படியுமாக உருண்டோடியது.

## தெலீலாளுடன் சினேகம் கொண்டு சிதைந்த சிம்சோன்

சிம்சோனின் மனைவி அல்ல, அவள் சிம்சோனின் நண்பி. **தான் எதற்காக உருவாக்கப்பட்டவன் என்பதனையும், எங்கு தான் நிற்கின்றேன் என்பதனையும் மறந்த வாலிப ஜீவியம் ஆபத்தானது.**

ஆற்றங்கரை ஓரமான சினேகம் இது யாரும் கண்டும், இது அவதானிப்புக்கு எடுக்கப்படாத சினேகம். ஒருவரும் தப்பாக நினைக்காத அளவுக்கு மறைமுகமான இன்பங்களை அனுபவிக்கும் சினேகம். **வெளியே இருவரும் நண்பர்கள் எனக் காண்பிக்கும் கண் துடைப்பு ஆபத்தானது.** சிம்சோன் தெலீலாள் கள்ளத் தொடர்பு கொண்டு நீண்ட நாட்களாக வாழ்ந்து வந்தனர்.

தினம் தினம் தெலீலாள் தன் வார்த்தைகளினால் சிம்சோனை நெருக்கி அலட்டிக் கொண்டு இருந்ததினால் சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு தன் இருதயத்தையெல்லாம் தெலீலாளுக்கு வெளிப்படுத்தி தான் பிறந்தது முதல் எவ்விதமாக வளர்க்கப்பட்டவன் என்பதனை தெளிவுபடுத்தி சொல்லிவிட்டான்.



**பெலிஸ்தருக்கு தெலீலாளின் இறுதி அழைப்பு இந்த ஒரு விசை மாத்திரம் வாருங்கள்...**

**சினேகிதியின் மடியில் சிம்சோன், தலைமயிர் சிரைப்பு.... அவன் பலம் அவனை விட்டு நீங்கிவிட்டது. எப்போதும் செய்வது போல உதறிப்போட்டு வெளியே போவேன் என்றான். (நியாயாதிபதிகள் 16:20)**

வழமையாகவே பாவச் செயல்காணப்படுமானால் பரிதாபம் இன்றே அவற்றை விட்டு விடு.



# ஐயோ! சிம்சோனின் கண்களை காணோமே

**ஒருவன் பாவத்திலே இன்பம் கொண்டு தன் வாழ்நாட்களை அதற்கு விற்றுப் போடுகிறவனாக இருப்பானானால் அவன் முதலாவது இழக்க நேரிடுவது தன் கண்களை ஆகும்.**

தரிசனம், எதிர்காலம், தேவன் வைத்த திட்டம் ஐயோ! வாலிபத்தின் அழகு, பிறரை வழிநடத்தும் ஆற்றல், அனேகரைத் தப்புவிக்கும் புலன் எல்லாம் போய்விட்டது. சிம்சோனிடத்திலிருந்து...

**இதை வாசிக்கும் எனக்குப் பிரியமான சகோதர, சகோதரியே ஒரு வேளை நீ வாலிபத்தை கடந்து இருக்கலாம். அல்லது சிறு பிள்ளையாய் இருக்கலாம். உன் தோழமை யாரோடு? திருமணமானவர்களே உங்கள் சினேகிதத்துவம் எப்படிப்பட்டது?. அது உன் மனைவிக்கு, கணவனுக்கு தெரியுமா? பிள்ளைகளே உங்கள் நட்பின் நேர்மையை பெற்றோர் அறிந்திருக்கிறார்களா? குடும்பமாக உங்களுக்கு எப்பேற்பட்ட சினேகம்:. தோழமை உண்டு என்பதனை ஆராய்ந்து சீர்ப்படுங்கள். பரிசுத்தத்தை சிதைத்து பரலோகத்தையும் விலையேறப்பெற்ற பொற்கிரீடத்தையும் இழந்து போகாதபடி...**

***இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஆவியானவர் திருவுளம் பற்றுகிறார். அவரோடு தோழமை கொள். அவரே உன்னை செம்மையான பாதையில் நடத்துவாராக.***

**“ஒருவன் தன் சினேகிதனோடே பேசுவது போல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் பேசினார். யாத்திராகமம் 33:11**

**அன்பரின் அறுவடையில்.**
**போதகர் வேதநாயகம் சுமணன்.**

***கர்த்தரைவிட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 17:5***

# பெண்கள் அரங்கு

## மரணத்திலிருந்து தப்ப உண்மை பேசுவோம்

இரட்சிக்கப்பட்டவன் புதிய சிருஷ்டியாயிருக்கின்றான். பழையன ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. உண்மையாக இரட்சிக்கப்பட்டவன் ஒரு நாளும் பொய் பேசமாட்டான். பொய் பேசுகிறவர்களின் தகப்பன் பிசாசு (யோவான் 8:44).

அப்போஸ்தலர் 04ம் அதிகாரத்தில் விசுவாசிகளாகிய கூட்டத்தார் நிலங்களையும், வீடுகளையும் விற்று கிரயத்தை அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தார்கள். சகலமும் பொதுவாயிருந்தது. **அவர்கள் ஒரே இருதயமும் ஒரே மனமும் உள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் ஒன்றையும் தன்னுடையது என்று கூறவில்லை. அத்துடன் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருக்கவில்லை.** தேவைக்குத்தக்கதாய் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இவர்கள் மீது பூரண கிருபை இருந்தது.

அப்போஸ்தலர் 5:1-10 இப் பகுதியில் நாம் பார்க்கும் போது, விசுவாசிகள் செய்தது போல அனனியாவும் அவனது மனைவி சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்று அவனது **மனைவி அறிய அதில் ஒரு பங்கை வஞ்சித்து**, ஒரு பங்கை அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தார்கள். **வேதாகமத்தில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது**, ஏன்? அவனது மனைவியாகிய சப்பீராள் எல்லாவற்றையும் நன்கு அறிந்திருந்தாள். ஆனாலும் அவள் தான் எதனையும் அறியாதவள் போல நடித்தாள். இதன் முடிவு மிகவும் பரிதாபமானதாக இருந்தது.

**தன்னுடைய கணவன் வஞ்சித்து வைத்ததை அறிந்த மனைவி கணவனை பொய் சொல்லாதபடி தடைசெய்து அவனின் மரணத்தில் இருந்து தப்புவித்திருக்கலாம்.** ஆனால் அவர்களுக்குள் இருந்த பண ஆசையின் நிமித்தம் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பொய் சொல்வதற்கும் அவர்கள் பயப்படவில்லை.

கணவன் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்ததை நன்கு அறிந்த மனைவி கணவனுக்கு ஏற்பட்ட மரணத்தை அறியாமல் உள்ளே வந்தாள். அவளிடம் **"பேதுரு எனக்குச் சொல்"** என்று சொன்ன போது கூட அவள் உண்மையை கூறாமல் பொய் பேசினாள். **மூன்று மணிநேர இடைவெளி அவளுக்கு இருந்தது. ஆனால் அவ் நேரங்களை தான் மனம்திரும்பு வதற்கு அவள் பயன்படுத்தவில்லை. பூரண கிருபை பெற்றவர்கள் (அப்போஸ்தலர் 4:33) பொய் சொன்னதின் நிமித்தம் கிருபையை இழந்து கணவன், மனைவி இருவரும் சீவனை விட்டார்கள்.**

**2010ம் ஆண்டு மனைவியாகிய நீயும் அறிய பல பாவமான காரியங்கள் உன் குடும்பத்தில் நடைபெற்ற போதும் தேவஊழியர் (உன் போதகர்) விசாரித்த போது சாத்தான் உன் இருதயத்தை நிரப்பியதின் நிமித்தம் நீ பொய் சொன்னாய்!. தேவனுடைய மனிதனுக்கு நீ பொய் சொன்னபோது, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லுகிறாய் என்பதனை மறந்து போகாதே. அனனியா சப்பீராளுக்கு ஏற்பட்ட நிலை எமது குடும்பத்தில் ஏற்படவில்லை. அது தேவகிருபையே.**

<u>**மனைவியாகிய நீ 2011ம் ஆண்டு உன் குடும்ப விடயத்திலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்ல சாத்தான் உன் இருதயத்தை நிரப்ப இடம் கொடுக்காமல் எந் நிலையிலும் உண்மை பேசுவேன் என்ற தீர்மானத்துடன் செயற்படு. அப்போது தேவஆசீர்வாதம் உன் குடும்பத்தில் இருக்கும்.**</u>



**திருமதி பிலிப்**

**எல்லாம் இருந்தும் இயேசு இல்லாவிட்டால் ஒன்றுமில்லை: ஒன்றும் இல்லாமல் இருந்தும் இயேசு இருந்தால் எல்லாம் உண்டு.**

# குறுக்கெழுத்துப்போட்டி - 41



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | 2 |
| | | | | | | | 3 | |
| | | | | | | 4 | | |
| | | | | | | | | |
| | | 5 | | | | 6 | | |
| | | | | 7 | | | | |
| | | | | | | 8 | | |
| 9 | | | | | | | | |
| | 10 | 11 | | | | | | 12 |

## இடமிருந்து வலமாக

01. நியாயப்பிரமாணத்தையும் ராஜ நீதியையும் அறிந்தவர்களிடத்தில் பேசுவது தனக்கு வழக்கமாயிருக்கிறது என்றது யார்?.
03. இரண்டு ஒரே எழுத்துக்கள் சேர்ந்து ஒரு மனிதன் பெயராகிறது. அவன் யார்?
05. தேவபக்தி மிகுந்தவன் தேவ சமூகம் நின்றவன் அற்புதங்கள் பல செய்தவன் அரசனையே கலங்கச் செய்தவன் ஒரு பெண்ணைக் கண்டு பயந்து மரிக்க நினைத்தவன் இன்று மேலோக நாட்டில் தேவனோடு பேசிக்கொண்டிருக்கிறான்.
06. என்னைப்பற்றி தேவனை மகிமைப்படுத்தினார்கள் யாரை?
10. கசப்பு தண்ணீர் மதுரமானது எங்கே?

## வலமிருந்து இடமாக

02. ஞானதிருஷ்டியுள்ள புருஷன் என அழைக்கப்பட்டவன்
04. தேவனாகிய கர்த்தரை நிந்திக்கவும் அவருக்கு விரோதமாக பேசவும் நிருபங்களை எழுதியவன்
08. நீ என் எலும்பும் மாம்சமுமானவன் என்று சொன்னவன் யார்?
12. அரங்கசாலைக்குள் இழுத்துக் கொண்டு போகப்பட்டவர்களில் ஒருவன்.

## மேலிருந்து கீழாக

01. நீ உன்னிலுள்ள உன் தேவனுடைய ஞானத்தின்படியே ஏற்படுத்துவாயாக என்று உரைத்தது யார்?
02. ஏசாவின் மறுபெயர் என்ன?
04. முத்திரை போடப்படாத ஒரு கடிதத்தை அனுப்பினவன் யார்?
07. எந்தக் காற்றினால் உஷ்ணம் வரும்?
09. வேதாகமத்தில் உள்ள சிறிய பெயர் என்ன?

## கீழிருந்து மேலாக

03. தொட்டபின் விசுவாசிப்பேன் என்றது யார்?
05. விதவைகளை வெறுமையாய் அனுப்பி விட்டீர்கள் என்று கூறியது யார்?
11. தன் புருஷனிடம் எனக்கு பிள்ளை கொடும் இல்லையென்றால் நான் சாகிறேன் என்று சொன்ன ஸ்திரி.
12. பிரதான தூதர்களில் ஒருவன்.

# மேலும் கடைசி நாட்களில்....




**உ**லகம் ஒரு பாரிய விளைவைச் சந்திக்கப் போகிறது என்பதனை உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகளும், வான சாஸ்திரிகளும், வேத விற்பன்னர்களும் அடித்துரைத்துக் கொண்டே இருக்கின்றனர்.



பூகம்பங்களும், பூமியதிர்ச்சிகளும் இயற்கையின் சீற்றங்களும்,



அசாதாரணமான தாக்கங்களும், அதிசயப் பிறப்புக்களும், பிரமிக்க வைக்கும் விஞ்ஞான, இலத்திரனியல், அணுகதிரியக்க செயற்பாடுகளும் **எதை அறிவிக்கின்றன என்றால் ஏதோ ஓர் அழிவு வரமுன்னால் அறிவு படைத்த மனிதனின் வரலாறுகளை அடக்கும ஓர் தெய்வீகத் திட்டம் வெளிப்படப் போகின்றது.** எனவே ஓர் தீர்மானத்தை உலகெங்கிலும் இருக்கும் மனிதக் கூட்டம் எடுக்க வேண்டிய இறுதியும் அறுதியுமான கட்டம் இதுவாகும்.

வேதப்புத்தகம் கடைசி நாட்கள் எப்படிப்பட்ட மனித வெளிப்பாடுகளைக் கொண்டது என்று கூறுகினறது எனப்பார்த்தால்: **11தீமோததேயு 3:1-5 மேலும், கடைசி நாட் களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், அகந்தையுள் ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன் மாருக்குக் கீழ்ப்படியா தவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவாளாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், நல்லோரைப்**

**பகைக்கிறவர்களாயும், துரோகிக ளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப் பிரியராயிராமல் சுக போகப்பிரிய ராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக் கிறவர்களாயும் இருப்பார்கள். இப் படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு.**

மேலே பார்த்த குறிப்புக் களின் மக்கள் கூட்டத்தை நாம் ஓர் வேற்றுலகில் காணமுடியாது. எமது வீட்டிலும், வேலைத்தலத்திலும், சமுதாயத்திலும் தேசத்திலும் நாம் காண்கின்றோம். எனவே இதுவே உண்மை நிலை. எதை இழக்க நீங் கள் ஆயத்தம்? எதை நீங்கள் பெற ஆயத்தம்?

**இந்தப் பயங்கரமான நிலை யைவிட்டு வரும் அழிவுக்குத் தப்ப நீங்கள் நாடி ஓட வேண்டிய கன் மலை, பரிசுத்தபுயம் எதுவென்றால் கல்வாரிச் சிலுவை மாத்திரமே. கடைசி நாளிலும் கிரியை செய்யக் கூடாத வேளைகளிலும் கிருபை பெறவேண்டுமானால் நீங்களும் உங்கள் குடும்பமும், சமுதாயமும் தேடிக்கொள்ள வேண்டிய ஒரே நபர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மாத்திரமே.**

**எனவே வரும்ஆபத்துக் குத் தப்ப ஓடி வாருங்கள்; கன் மலையாம் கிறிஸ்து விடம்...**

## குறுக்கெழுத்துப் போட்டி - 40
## சரியான பதில் எழுதியவர்கள்

01. தி.ஜெகா - மயிலங்காடு
02. தே.மேரிஅக்னேஸ் - ஊர்காவற்றுறை
03. ம.ரீகா - ஊர்காவற்றுறை
04. உ.டிரோன் - ஊர்காவற்று
05. ரி.கிருஸ்ணகுமார் - ஊர்காவற்றுறை
06. ரி.நிக்ஷன் - ஊர்காவற்றுறை
07. இ.செந்தாழினி - ஊர்காவற்றுறை
08. க.றெஜீவன் - ஊர்காவற்றுறை
09. வி.கலியுகன் - ஊர்காவற்றுறை
10. வி.சர்மிளா - ஊர்காவற்றுறை
11. வி.நிதர்சன் - ஊர்காவற்றுறை
12. செ.எலிசம்மா - புன்னாலைக்கட்டுவன்
13. த.முகுந்தராசா - புன்னாலைக்கட்டுவன்
14. மு.எஸ்ரா - புன்னாலைக்கட்டுவன்
15. எம்.கிறிஸ்ரீன் தெபோ - புன்னாலைக்கட்டுவன்
16. மு.சுபாசினி - புன்னாலைக்கட்டுவன்
17. சி.தங்கமணி - மீசாலை
18. எஸ்.மார்கிறேட் - மீசாலை
19. எஸ்.யோகேஸ்வரி - மீசாலை
20. அ.தேவதாசன் - மீசாலை
21. ச.சனோஜா - மீசாலை
22. இ.கருணாரூபி - பள்ளிக்குடா
23. இ.எப்சிபா - பள்ளிக்குடா
24. இ.எஞ்சலின் கிறிஸ்ரி - பள்ளிக்குடா
25. பா.கோமதி - காரைநகர்
26. ம.டயானி - பாண்டவெட்டை
27. றொ.அஜந்தன் - ஊர்காவற்றுறை




**விசுவாசிகள் வேதாகமத்தின் சத்தியங்களை அறிந்து கொள்ளும்படியான "பக்தர்களின் பயிலகம்" பகுதியானது இப் புதிய ஆண்டில் மற்றுமோர் கற்பித்தலை தருகின்றது. இதுவும் கர்த்தரின் மகிமையில் பிரவேசித்த போதகர் இன்பரூபன் அவர்களின் தொகுப்பாகும்.**

# புளித்தமா

**லேவியராகமம் 23:6 அந்த மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லா அப்பப்பண்டிகையுமாய் இருக்கும். ஏழு நாள் புளிப்பில்லா அப்பங்களைப் புசிக்க வேண்டும்.**

கிறிஸ்தவ வாழ்க்கையானது ஒரு பண்டிகையாகும். ***ஆன்மீக ரீதியில் அல்லது ஆவிக்குரிய ரீதியில் மரண ஓலங்களும் பஞ்சத்தின் படிவங்களும் நிறைந்தவை அல்ல***. லேவியராகமம் 23ம் அதிகாரத்தில் கர்த்தரின் 07பண்டிகைகளைக் காணலாம்.

***இதில் கர்த்தர் நமக்குச் செய்தவற்றைக் காணலாம். அது*** இயேசு கிறிஸ்து நமக்கு என்ன செய்தார் என்பதையும் இனி நமக்கு என்ன செய்வார் என்பததையும் காண்பிக்கின்றது. ***அத்தோடு நாம் ஆற்ற வேண்டிய பங்கும் அடங்கியிருக்கின்றது***. இப் பண்டிகைகளின் தொடர் பஸ்காப் பண்டிகையோடு ஆரம்பிக்கின்றது.

***கர்த்தரின் விருந்திலே பங்கு கொள்ள ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் மூலமே வரவேண்டும் (இயேசுவின் மூலம்)***. இரண்டாவது பண்டிகை தான் புளிப்பில்லா அப்பப் பண்டிகையாகும் முதல் மாதத்தின் 14ம் நாள் பஸ்காப் பண்டிகையை கொண்டாடினார்கள்.

***15ம் நாள், - 21ம் நாள் வரை புளிப்பில்லா அப்பப்பண்டிகையாகும்.*** யாத்திராகமம் 12:15, யாத்திராகமம் 12:19,20, யாத்திராகமம் 13:7 ***தேவன் இந்த 07நாட்களும் புளித்தமாவை விலக்க வேண்டும். அகற்ற வேண்டும் எனத் தெளிவாகக் கட்டளையிட்டிருந்தார்.*** புளித்த மா – பிசைந்த மாவை பொங்கப்பண்ணும்.

***வேதத்தில் இந்த புளித்தமா பாவத்திற்கு அடையாளமாக இருக்கின்றது.*** ஏன் தேவன் இந்த புளித்த மாவை பாவத்திற்கு அடையாளமாக ஒப்பிடுகின்றார். ***இந்த புளித்த மா இரகசியமாகவும் அமைதியாகவும் பரவும் தன்மையுள்ளது. – பாவத்தைப் போல.*** உண்மையில் அது பிசைந்த மாவில் தொற்றுகின்றது. ***பிசைந்த மா பொங்கும் சத்தம் உங்களுக்கு கேட்காது. ஆனால்*** பொங்கி இருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

***பிசைந்த மா முடிவில் பொங்கிப் போய் இருக்கும்.*** இது பாவத்தின் பூரண படமாக தோன்றுகின்றது. 1கொரிந்தியர் 5:12 இறுமாப்பு. ***புளித்த மா பாவத்தின் அடையாளம்.*** பாவம் இரகசியமாகவும் மெதுவாகவும் நம் வாழ்க்கைக்குள் பிரவேசித்து பரவும். ***அது வளர்ந்து நம்மை இறுமாப்படையச் செய்யும்.*** இஸ்ரவேலர் அடிமைத் தனத்திலிருந்து புளித்தமாவை அகற்றியதன் நிமித்தம் மீட்கப்படவில்லை. ***இரத்தத்தினால் மாத்திரமே மீட்கப்பட்டனர்.***

அதே போல் நீங்களும் இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்த விசுவாசத்தினாலேயே இரட்சிக்கப்பட்டீர்கள். ***எனவே கிறிஸ்துவின் நாமத்தை சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவன். 11தீமோத்தேயு 2:19 என்பது தேவவாக்கு.*** 11கொரிந்தியர் 6:19 ***வேதத்தில் 0வேிதமான புளித்தமா குறிப்பிடப்பட்டுள்ளது.*** வெவ்வேறு விதமான பாவங்கள். ***உங்களது கிறிஸ்தவ வாழ்க்கை ஏன் வளரவில்லை என நீங்கள் யோசிக்கலாம்.*** புளித்த மா (பாவம்) இருந்தால் அகற்றுங்கள்.

**(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)**

தொடரும்......

**கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.**

**ரோமர் 8:2**

# அருட்பணியாளர் சரிதை

## டாக்டர். விகோ ஒல்சன்



டாக்டர் விகோ ஒல்சன் தனது வாழ்நாட்களை ஒரு அருட்பணியாளராக கிழக்கு பாகிஸ்தான் என அழைக்கப்பட்ட பங்களாதேஷில் முஸ்லிம் மக்களோடு செலவிட்டார். மிகுந்த தேவையில் இருந்த பெங்காளி மக்களுக்கு சேவை செய்ய மிகவும் போராடினார்.

### நீண்ட கால வாஞ்சையான மருத்துவக் கல்வியைத் தொடரல்

அவர் 1944ல் ஒமாஹா, நெப்ரஸ்கா என்ற இடத்தில் உள்ள மேற்பள்ளியில் தனது பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு உடனடியாக மருத்துவக் கல்வியை கற்க தீர்மானித்தார். அவர் மருத்துவக் கல்வியை டியுலானே பல்கலைக்கழகத்தில், ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையின் உதவியினால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டத்தின் கீழ் கற்றார். பின்னர் அவர் அங்கிருந்து நெப்ரஸ்கா பல்கலைக் கழகத்திற்கு சென்றார். ஏழு வருட கடின உழைப்பிற்கு பின்னர் மருத்துவத்தில் எம்.டி பட்டத்தைப் பெற்றார். தனது மேற்படிப்பை முடித்துவிட்டு, ஜொயான் என்பவரை திருமணம் செய்தார். அவர் ஒரு மருத்துவராக மருத்துவத்துறையினால் வரக்கூடிய புகழ்ச்சியான ஒரு வாழ்க்கையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

### தனது வாழ்க்கையின் ஆவிக்குரிய தேவையை உணர்ந்து கொள்ளல்

விகோ ஒல்சன் திட்டமிருந்த வாழ்க்கை முறையில் கிறிஸ்தவத்திற்கு இடமே இருக்கவில்லை. அவருடைய அன்றாடக வாழ்க்கையிலே வேதப்படிப்பு, ஆலயம் செல்லல் என்பவை காணப்படவில்லை. அவர்கள் எவ்வளவுக்கு கிறிஸ்தவத்தை ஒதுக்கினார்களோ, அந்தளவிற்கு அதை விட்டுவிட்டு போகமுடியவில்லை. விகோவின் மனைவி ஜொயானின் பெற்றோர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள். அவர்கள் கிறிஸ்துவின் மீது கொண்ட விசுவாசத்தினால் பெற்றுக் கொண்ட சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தங்கள் மகளும் மருமகனும் பெற்றுக்கொள்ள வேண்டும் என மிகவும் வாஞ்சித்தார்கள். ஆனால் விகோ வேதாகமத்தை, கடவுள் இல்லை என்ற கொள்கையுடைய கண்ணோட்டத்திலேயே பார்த்தார். நவீன விஞ்ஞானத்திற்கும், சமய நம்பிக்கைகளுக்கும் சம்பந்தமில்லை என எண்ணினார். விகோவினதும்,

மனைவியினதும் ஒரு கிறிஸ்தவ போதகருடனான நீண்ட நேர கலந்துரையாடல் அவர்களுடைய மனமாற்றத்திற்கு வழிவகுத்தது.

## தேவனுடைய அழைப்பின் அனுபவம்

விகோ, மருத்துவத்தை பயிற்சி செய்து, அதை கற்பித்துக் கொண்டு, சாதாரணமான சந்தோஷமான வாழ்வை அனுபவித்துக் கொண்டிருந்த போதும், தனது வாழ்க்கையிலே ஒரு வெற்றிடத்தை உணர்ந்தார். தனது வாழ்க்கைக்கான தேவனின் திட்டம் யாது என தனக்குள்ளே கேள்வி கேட்க ஆரம்பித்தார். விகோவும் மனைவியும் ப்ருகவின் என்ற இடத்தில் வசிக்க உத்தேசித்தார்கள். அவர்கள் அங்கு செல்வதற்கு முன்னதாக ஒரு நாள் ஆலயத்திலே வயோதிபப் பெண் ஒருவர் "டாக்டர் ஒல்சன் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார், இனி அவர் ஒரு மிஷனெரியாவதில் எந்தவித சந்தேகமும் இல்லை" என்று கூறுவதை தற்செயலாய் கேட்டார். இக் கூற்றானது அவருடைய மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. மாதங்கள் பல கழிந்தன. அவர்களுடைய திட்டம் கொஞ்சம் கொஞ்சமாக மாற ஆரம்பித்தது. அவரும் மனைவியும் ஊக்கமாக ஜெபித்து வந்தார்கள். மருத்துவ அருட்பணியே தேர்வாக இருந்தது. ஒரு நாள் விகோ தனிமையாக கடற்கரையில் நடந்து கொண்டிருந்தார். அப்போது அவருடைய அனுபவம், மனித உணர்வு, வேதாகம படிப்பு, கடவுளின் வழிநடத்தல் போன்ற மேலும் பல சக்திகள் எல்லாத் திசையாலும் அவரை நெருக்குவதை உணர்ந்தார். அப்பொழுதே அவர் முழங்காற்படியிட்டு தேவனின் அழைப்பாகிய வெளிநாட்டு மருத்துவ அருட்பணிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

## விகோவின் மருத்துவமும் அருட்பணியும்

1954-1959ம் ஆண்டு காலப்பகுதியில் விகோவின் குடும்பமானது மூன்றிலிருந்து ஆறுபேராக அதிகரித்தது. அவர் மிஷன் போர்டின் (Board) அங்கீகரிப்புக்கு காத்திருக்காமல் தனது மருத்துவ அருட்பணியை தொடர்வதற்குத் தேவையான சகல ஆயத்தங்களையும் செய்தார். அவர் உள்நாட்டில் இருந்த போதும் வெளிநாட்டில் இருந்த போதும் மருத்துவத்தை அருட்பணியின் ஒரு பகுதியாகவே கருதினார். ஒரு பகல் நேரத்தில் மில்வொய்கீ வைத்தியசாலையில் நோயாளிகளைப் பார்க்க சென்ற போது, சத்திர சிகிச்சைக்காக ஆயத்தமாயிருந்த ஒரு நோயாளி மிகுந்த பயத்துடன் இருப்பதனை உணர்ந்தார். விகோ அந் நோயாளிக்கு அவருடைய புற்று நோயின் அகோரம், சத்திர சிகிச்சையின் ஆபத்து குறித்தும், தேவனைக் குறித்தும், விசுவாசத்தைக் குறித்தும், இயேசு தன்னை எமக்காக மரணத்திற்கு ஒப்புக் கொடுத்ததைக் குறித்தும் விளக்கிக் கூறினார். அந் நோயாளி சத்திர சிகிச்சையின் பின்னர் வைத்தியசாலை கட்டிலில் இருக்கும் போதே

தொடரும்....

# மூவரி

மு த் து க் க ள்

சத்தியம் தினம்
பேசும்
வசனம்

தொலைத்தவனும்
தேடுபவனும் சேர்ந்து தேடுவது
சந்தோசத்தையே

சாம்ராஜ்ஜியங்கள்
சரிவது
மாய்மாலத்தினாலேயே

மற்றவரை மதிப்பது
என்பது
கிறிஸ்தவ அன்பு

மறுபக்க வருமானம்
பாராதது
மன்னிப்பு

தன்னை மறைத்து
வாழ்வதும் – ஓர்
வல்லமையை

மனதின் பிரமாணங்களின்
நாதேனு
இருதயம்

உண்மையுள்ள
பக்தியே
மெய்யார்வம்

உள்ளத்தை ஊற்றும்
பிரசங்கத்திற்கு அவசியம்
ஜெபம்

ஜெபத்தின் மகிமை
தேவனுடைய
ராஜ்ஜியம்



# புதுவருடத்திற்கான அனலின் ஆன்மீக விருந்து

## தேவனுடைய வல்லமை உங்கள் வாழ்வில் தங்கட்டும்

**அவர்களைப் பார்த்து பயப்படவேண்டாம் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கின்றார், அவர் வல்லமையும் பயங்கரமுமான தேவன். உபாகமம் 7:21**

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் இனிய நல் நாமத்தில் இந்த **2011 ஆம் ஆண்டு அனல் சஞ்சிகை** வாயிலாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். "அனல்" வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் இதயம் நிறைந்த புது வருட வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த 2010ஆவது ஆண்டு எமது வாழ்க்கையில் பலவிதமான சூழ்நிலைகளை எதிர்நோக்கினோம், ஆனால் அவற்றிற்கு மத்தியிலும் கடந்த ஆண்டு கர்த்தர் எமக்கு கொடுத்த வார்த்தை **"கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்" யோசுவா 3:5** இன்படி எம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அற்புதங்களை காணும்படி செய்ததை பல சாட்சிகள் மூலம் அறிந்து கர்த்தரை மகிமைப்படுத்துகின்றேன்.

**இன்று பிறந்திருக்கும் 2011 ஆம் ஆண்டு கர்த்தர் எமக்கு கொடுக்கும் வார்த்தை:**

**"அவர்களைப் பார்த்து பயப்படவேண்டாம் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கின்றார்; அவர் வல்லமையும் பயங்கரமுமான தேவன்" உபாகமம் 7:21**

**இன்படி நிச்சயமாகவே நேற்றும் இன்றும் என்றும் மாறாத ஆண்டவர் உங்களோடிருந்து உங்களை வழிநடத்துவாராக!**

இந்த வசனத்தின் பின்னணியை பார்ப்போமாகில் இஸ்ரவேல் மக்கள் தங்களுக்கு தேவன் வாக்குப்பண்ணிய கானான் தேசத்தை நோக்கிப் பயணிக்கும் வேளையில் தேவன் மோசேக் கூடாக இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்துக் கூறிய கட்டளை. 'கானான தேசத்தில் வாழ்ந்த ஜனங்கள் பார்வைக்கு பயப்படத்தக்க உருவம்', அப்படிப்பட்ட இராட்சத ஜனங்களை கண்டு இஸ்ரவேலரைப் பயப்பட வேண்டாம் என்று கூறினார். **கர்த்தருடைய வருகை அதி சீக்கிரம் என்பதை நடைபெறும் கடைசிக்கால அடையாளங்கள் அல்லது அவ் அடையாளங்களை நிறைவேற்றும் முயற்சிகள் மூலம் தெளிவாய் அறிக்கூடியதாகவுள்ளது.** நாமும்எமக்கு வாக்குப்பண்ணப்பட்ட பரம கானானாகிய பரலோக ராஜ்ஜியத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் வேளையில் ஆண்டவர் எம்மைப் பார்த்தும் இதே வார்த்தையை கூறுகின்றார். பல பயப்படத்தக்க, பரலோக பயணத்தை தடை பண்ணக்கூடிய பல இராட்சதர் எமக்கு முன் தோன்றுவர் ஆனாலும் அவர்களைப் பார்த்து பயப்படவேண்டாம்.

இஸ்ரவேலரைப் பார்த்து இதைக் கூறக் காரணம் **அவர்கள் நடுவில் இருக்கும் கர்த்தர் வல்லமையுள்ளவர், பயங்கரமானவர்.** ஜனங்களுக்கு நடுவிலே தேவன் காட்டிய அதே மாதிரிக்கமைய மோசே ஆசரிப்புக் கூடாரத்தை அமைத்தான் அதில் கர்த்தர் வாசம்பண்ணினார். **பழைய ஏற்பாட்டில் ஆசரிப்புக்கூடாரம் எனப்படுவது, தற்போது தேவனுடைய ஆலயம்/வீடு.** வீடு எனப்படும் போது அது ஒருவருடைய வாசஸ்தலத்தைக் குறிக்கும். இயேசுவும் எருசலேம் ஆலயத்தைப் பார்த்து **மத்தேயு 21:13 இல் "என்னுடைய வீடு ஜெப வீடு....."** என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

எனவே பிரியமான தேவ ஜனமே **எமது ஆலயம் தேவாதி தேவன் வாசம்பண்ணும் வீடு.** இஸ்ரவேலரைப்பார்த்து தேவ கட்டளையின்படி மோசே சொன்ன அதே வார்த்தையின்படி புதிய ஆண்டிலும் நிச்சயமாகவே தேவன் உங்களுக்குள்ளே இருக்கின்றார். ஒருமனிதனுடைய நடு/மையப் பகுதி இருதயம் எனவே எம் இருதயங்களில் தேவன் வாசம்பண்ண வேண்டும். அதேபோல கிறிஸ்தவ சமூதாயத்தின் மையப்பகுதி தேவனுடைய ஆலயம். எனவே தேவ ஆலயத்தில் தேவன் வாசம்பண்ணுவதால் நாம் ஒவ்வொருவரும் ஆலயத்திற்குள் இருப்பதை ஆண்டவர் எதிர்பார்க்கின்றார். **எபிரேயர் 10:25 "சபை கூடிவருவதை சிலர் விட்டுவிடுவது போல நாமும் விட்டுவிடாமல்...." சிலர் ஏதாவது நல்ல நாட்களில் மாத்திரம் ஆலயத்துக்குப் போனால் போதும் என்று... நினைப் பார்கள். இல்லை அருமையானவர்**

**களே இருதயத்தில் ஆண்டவர் வாசம்பண்ணினால் நிச்சயமாகவே அவர் வாசம்பண்ணும் ஆலயக்கதவு திறக்கும் போது நாம் ஆலயத்திற்குள் இருப்போம்.**

இந்த வசனத்தினுடைய கடைசிப்பகுதியில் ஆண்டவருடைய இரண்டு முக்கியமான குணாதிசயத்தைக் காணலாம்.

1. **வல்லமையுள்ளவர் – வல்லமையுள்ளவர் என்கின்ற போது அவருடைய மகத்துவங்களைக் குறிக்கும். அவர் தம்முடைய ஜனங்களுக்கு வல்லமையுள்ளவராகவே இருப்பார்.**

2. **பயங்கரமானவர் - இது அவருடைய கோபத்தை வெளிப்படுத்துகின்றது. இது அவருடைய ஜனங்கள் அல்லாதவர்களுக்கு அவர் பயங்கரமானவராக இருப்பார்.**

பரிசுத்த வேதாகமத்தைப் பார்க்கின்ற போது அவருடைய இவ் இரண்டு குணாதிசயங்கள் பல தடைவைகளில் வெளிப்படுவதைக் காணலாம்.

**யாத்திராகமம் 13, 14** அதிகாரங்களில் இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டு சிவந்த சமுத்திரத்தை கடக்கும் சம்பவத்தைக் காணலாம். கர்த்தர் அவர்களுக்குள் இருந்தபடியால் **யாத்திராகமம் 13:21 "பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பதிலும் இரவில் அவர்களுக்கு வெளிச்சம் காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்."**

இதே மேகஸ்தம்பம் இஸ்ரவேலர்கள் சிவந்த சமுத்திரத்தை கடக்கும் போது இருவேறுபட்ட கூட்டத்திற்கு வேறுபட்ட விதத்தில் காணப்படுவதை **யாத்திராகமம் 14:19,20** இல் காணலாம். எகிப்தியருக்கு அதாவது தேவ ஜனமல்லாதவர்களுக்கு, அந்நியருக்கு மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது. இங்கு ஆண்டவருடைய பயங்கரத்தை/கோபத்தைக் காணலாம். ஆனால் அது இஸ்ரவேலுக்கோ அதாவது தேவஜனத்திற்கு இரவை வெளிச்சமாக்கிற்று. **தேவன் இஸ்ரவேலுக்குள் வாசம்பண்ணியதால் அவர்களுக்கு அவர் வல்லமையாக காணப்பட்டார்.** ஒரே மேகம் வல்லமையாயும் பயங்கரமுமானதாகவும் இருந்தது. **உங்களுடைய வாழ்க்கையிலும் கர்த்தர் உங்களுக்குள்ளே இருப்பாராயிருந்தால் உங்களுடைய இரவுகள் இந்த வருடம் நிச்சயமாகவே வெளிச்சமாக மாறும்.** மாறாக எகிப்தியரைப்போல பாவத்திற்கு அடிமைப்பட்டவர்களாக கர்த்தர் உங்களுக்குள்ளே

வாசம் பண்ணாவிட்டால் அந்தகாரமாயிருப்பார்.

இதேபோல தானியேல் 3ம் அதிகாரத்தில் நேபுகாத்நேச்சார் ராஜா 60 முழ உயரமும் 6 முழ அகலமுமான பொற்சிலையை பண்ணுவித்து எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான வாத்தியங்கள் இசைக்கப்படும் போது எல்லாரும் தாழ விழுந்து பொற் சிலையை பணிய வேண்டும் என்ற கட்டளை ராஜாவினால் பிறந்தது. இந்த கடினமான சந்தர்ப்பத்தில் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்கின்ற இந்த மூன்று வாலிபர் களும் ராஜாவின் கட்டளை என்று அறிந்தும் தேவ வார்த்தைக்கு விரோதமாக இருந்தபடியால் சிலையை பணிய மறுத்துவிட்டனர். அவர்கள் பிடிபட்டபோது ராஜா மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கின்றார். **ஆனாலும் அவர்கள் தேவனுக்காய் திடமாய் இருந்தனர். காரணம் அவர்களுக்குள்ளே கர்த்தர் வாசம்பண்ணியதால். எம்முடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட நெருக் கடியான சூழ்நிலைக்குள் உறுதியாய் நின்று தேவனுடைய வல்லமையைக்காண வேண்டுமானால் அவர் நமக்குள்ளே வாசம் பண்ணவேண்டும்.** இங்கு அக்கினி 7 மடங்கு அதிகமாக சூடாக்கப்பட்டு அதில் மூன்று பேரும் போடப்பட்டார்கள். அந்த அக்கினி நடுவிலே என் தேவனுடைய வல்லமை காணப்பட்டது. விடுதலையோடு உலாவியது மாத்திரமல்ல என் தேவன் நான்காவது நபராக தென்பட்டார். **தானியேல் 3:24 "அப்பொழுது ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பிரமித்து, தீவிரமாய் எழும்பி....." உங்கள் நடுவில் கர்த்தர் வாசம் பண்ண இடம்கொடுப்பீர்களாக இருந்தால் அவர் உங்கள் நடுவில் இந்த ஆண்டு செய்யப்போகின்ற வல்லமையை நிச்சயம் உங்கள் கண்கள் காணும், அதுமட்டுமல்ல இதைக்கண்டு மற்றவர்கள் பிரமிப்பார்கள்.** வாலிபர்கள் அக்கினியைக் கண்டு திகைக்கவில்லை மாறாக விடுதலையோடு அக்கினியில் உலாவினார்கள். கர்த்தர் உங்கள் நடுவில் இருந்தால் நீங்கள் திகைக்க அல்லது பிரமிக்க மாட்டீர்கள் மாறாக விடுதலையோடு உலாவுவீர்கள்.

அப்போஸ்தலர் 4 ஆம் அதிகாரத்தில் கர்த்தர் அவர்களுக்கு நடுவில் வாசம்பண்ணியபடியால் அப்போஸதலர்கள் மூலம் கர்த்தருடைய வல்லமை காணப்பட்டது. அதற்கு மத்தியிலும் 5ஆம் அதிகாரத்தில் அனனியா சப்பிராள் என்பவர்கள் தங்கள் நடுவில் கர்த்தருக்கு இடம் கொடுக்காமல் பொய் சொல்ல சாத்தான் அவர்களை நிரப்ப இடம்கொடுத்தபடியால் அங்கு தேவனுடைய பயங்கரம்/கோபாக்கினை வெளிப்படுகின்றது. பிரியமானவர்களே தேவனுக்கு இடம்கொடுக்காமல் சாத்தானுக்கு எமது வாழ்க்

கையில் இடம்கொடுப் போமாயிருந்தால் நிச்சயமாகவே தேவன் நமக்கு பயங்கரமான வராய் போய்விடுவார். கர்த்தர் உங் கள் நடுவில் இருப்பாராயிருந்தால் அவர்வல்லமையுள்ளவராக இருப்பார்.

இறுதியாக **எண்ணாகமம் 16 ஆம் அதிகாரத்தில் கோராகும் அவன் கூட்டமும் எண்ணாகமம் 16:3"..... சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள் கர்த்தர் அவர்கள் நடுவிலே இருக்கின் றாரே இப்படியிருக்க கர்த்தரு டைய சபைக்கு மேலாக உங்களை (மோசேயையும் ஆரோனையும்) ஏன் உயர்த்துகிறீர்கள் என்றார்கள்"** தேவன் அவர்களுக்காக ஏற்படுத்திய தலைமைத்துவத்தை பார்த்து ஏன் உயர்த்துகிறீர்கள் எனக் கேட்டனர். அவர்களுடைய பார்வைக்கு மோசே தன்னைத்தான் உயர்த்துவது போல காணப்பட்டது. இப்படி அவர்கள் தங்கள் தலைமைத் துவத்திற்கு விரோதமாக கதைத்த போது 32 ஆவது வசனத்திலே பூமி தன் வாயை திறந்து அவர்களை உயிரோடு விழுங்கியதை காண் கின்றோம். இங்கும் தேவனு டைய பயங்கரம் வெளிப்படுவதைக காணலாம்.

இப்படிப்பட்ட பல சம்பவங் கள் மூலம் கர்த்தர் நடுவில் இருந் தால் அவருடைய வல்லமையை யும் அவர் நடுவில் இராவிட்டால் அவருடைய பயங்கரத்தையும் காணலாம்.

இன்று பிறந்திருக்கும் 2011 ஆம் ஆண்டில் கர்த்தர் உங்க ளுக்குள்ளே இருப்பாராகில் நிச்சய மாகவே அவருடைய வல்லமை யைக்காண்பீர்கள். கர்த்தர் உங்க ளுக்குள்ளே இல்லையே என்று இந்தக்கணத்தில் உணர்வீர்க ளாயிருந்தால் இப்பொழுதே உங் கள் வாழ்க்கையை ஒப்படைத்து அவரைப்பார்த்து சொல்லுங்கள்: ***ஆண்டவரே நான் பாவி எனக் குள்ளே நீர் வாசம்பண்ண வில்லை, எனக்குள் வந்து என்னை உம் முடைய தூய இரத்தத்தினாலே கழுவும், எனக்காகவே நீர் சிலுவை யிலே பாடுபட்டு மரித்தீர் என்ப தையும் நீர் ஜீவனுள்ள தேவனு டைய குமாரன் என்பதையும் விசுவா சிக்கின்றேன் இன்று இந்த புதிய ஆண்டில் நீர் என் உள்ளத்திற் குள் வந்து வாசம்பண்ணி என் வாழ்வின் ஆண்டவராய் வாரும்*** என்று கேட்கும் போது நிச்சயமா கவே அவர் உங்களுக்குள்ளே வருவார். அவர் உங்களுக்குள்ளே இருப்பாராகில் நாம் அவதா னித்த வேதாகம சம்பவங்களைப் போன்று அவருடைய வல்லமைகளை காணபீர்கள். அவர் வாசம் பண்ணா விட்டால் மேலே பார்த்தது போல ஆண்டவருடைய பயங்கரம் நமக்கு வெளிப்படும்.

தெரிவு செய்யவேண்டியது எமது பங்கு. தேவன் எமது வாழ்வில் வல்லமையுள்ளவராக இருக்கவேண்டுமா? அல்லது அவர் எமது வாழ்வில் பயங்கரமானவராக இருக்கவேண்டுமா? பிறந்திருக்கும் இந்த அருமையான 2011 ஆம் ஆண்டில் ஒரு சிறந்த தீர்மானத்துடன் கர்த்தர் எமக்கு கொடுத்த வாக்குத்தத்தை முன் நிறுத்தி தேவ பாதையில் பரிசுத்தமாய் அவர் எமக்குள் வாசம்பண்ணுகின்றார். என்ற முழு நிச்சயத்தோடு பயப்படாமல் பரம கானானின் பாதையில் செல்கின்றோம் என்பதை உணர்ந்தவர்களாய் தேவ வல்லமையை எதிர்பார்த்தவர்களாய் வாழ்வோம், ராஜாதி ராஜா சீக்கிரமாய் வருகின்றார்.

**“அவர்களைப் பார்த்து பயப்பட வேண்டாம் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கின்றார்; அவர் வல்லமையும் பயங்கரமுமான தேவன்” உபாகமம் 7:21**

தேவன் தாமே உங்களை
நிறைவாக ஆசீர்வதிப்பாராக !

**போதகர் ஜோகணன் டி. பிலிப்**
நிறைவேற்றுப்போதகர்,
சீயோன் தேவாலயம்,
யாழ்ப்பாணம்.

**அவர்களைப் பார்த்து பயப்படவேண்டாம் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கின்றார் அவர் வல்லமையும் பயங்கரமுமான தேவன்.**
**உபாகமம் 7:21**

# குறுக்கெழுத்துப் போட்டி – 40 சரியான பதில்கள்

### இடமிருந்து வலமாக

01. மோசேயின் மாமனார்

04. குணம்

05. யோனத்தான்

### மேலிருந்து கீழாக

02. சேத்

03. மாநிகு

04. குலத்தை

### வலமிருந்து இடமாக

04. குடல்

08. வேதம்

10. யோபு

### கீழிருந்து மேலாக

05. யோவேல்

06. அன்பும்

07. ஊர்

09. ஆதாம்

# வினாவிடை - 42 சரியான பதில்கள்

01. யெரொபெயாமின் வீட்டாருக்கு (1இரா 413:34)

02. எலியேசர் (ஆதி 24:48)

03. மீகா 5:13

04. இஸ்ரவேலர் (நியா 5:8)

05. சோரப்பிள்ளைகளாதலால் (ஓசியா 2:4)

06. பச்சைக்கிளி விட்ட செடிகளை (யோவேல் 1:4)

07. நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள் (2இரா 5:2)

08. மூப்பரிடத்தில் (எசே 7:26)

09. கர்த்தருடைய சத்தம் (யோவேல் 2:11)

10. அவரை விட்டு விலகுகிற எல்லார் மேலும் (எஸ்றா 8:22)

## வினாவிடை - 42 சரியான விடை எழுதியவர்கள்

01. தி.ஜெகா - மயிலங்காடு

02. நா.கஸ்தூரி - மானிப்பாய்

03. ம.டயானி - பாண்டவெட்டை

04. பா.டிலானி - காரைநகர்

## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத் துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர் களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

## சந்தா கூப்பன்

பெயர் :-.........................................................

விலாசம் :-.........................................................

.........................................................

.........................................................

.........................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.




To: ............................................................

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.